RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22341

OPEN ACCESS

# சைவப் புரட்சியாளர் வள்ளலார்

க. பன்னீர்செல்வம் [அ, *]

[அ] தமிழ்த் துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஈரோடு-638009, இந்தியா

# Saiva Revolutionary Vallalar

K. Panneerselvam [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, India

* Corresponding Author: ka.panneer73@gmail.com

Received: 18-03-2022
Revised: 07-06-2022
Accepted: 16-06-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Ramalinga Vallalar was a great man who showed a unique path in spirituality. In the early years, he was a Hindu fanatic, later a Saivite, and finally rose up against idolatry and guided the worship of light. He opposes caste, religion, gotra, etc. He presents progressive ideas. His comments also attract father Periyar, who was a rationalist campaigner. This article examines the compatibility of vallalar's ideas and father Periyar's ideas and vallalar's reformist ideas.

**Keywords:** Vallalar, Caste, Religion, Worship

## முன்னுரை

உலக சகோதரத்துவம், ஆன்மநேய ஒருமைப்பாடு இவற்றை அனைத்து மக்களிடமும் கொண்டுவர விரும்பியவர் வள்ளலார். 1823 ஆம் ஆண்டு அக்டோபர் 5ம் நாள் தமிழ்நாட்டில் சிதம்பரத்துக்கு அருகாமையில் உள்ள மருதூர் என்னும் சிற்றூரிலே ஒரு எளிமையான குடும்பத்திலே இராமையாப்பிள்ளை சின்னம்மை தம்பதிகட்கு ஐந்தாவது மகனாக இராமலிங்கம் பிறந்தார். ஏட்டுக் கல்வியில் ஈடுபாடு கொள்ளாது ஆன்மீகச் சிந்தனையில் ஈடுபாடு கொள்ளலானார். கேள்வியறிவில் சிறந்து விளங்கியதோடு சிறுவயதிலேயே இலக்கணம் குறையாமல் பாடல்கள் புனையும் ஆற்றலையும் பெற்றிருந்தார். இளம்வயதிலேயே கடவுள், சித்தாந்தம், சித்தர்கள் போன்றவற்றில் தமது சிந்தனைகளை செலுத்தத் தொடங்கிவிட்டார் என்பதை அவர் எழுதிய பாக்களின் வாயிலாக உணரமுடிகிறது.

## சைவத்தில் புரட்சி

இறைக் கொள்கையைப் பொறுத்தவரை முதலில் முருகன் வழிபாடு தொடங்கி, இராமனுக்கும் பாடல்கள் எழுதியுள்ளார். சிதம்பரம் நடராஜர் மீது பற்று கொண்டவராக பலநூறு பாடல்கள் பாடிய பின்னர், இறுதி நாட்களில் உருவ வழிபாடுகளில் இருந்து விலகத் தொடங்கினார். உலக மக்கள் அனைவரும் சாதி, சமயம், மொழி கடந்து வழிபடும் கடவுளாக அருட்பெருஞ்சோதி என்னும் ஒளியை வழிபட வழிகாட்டினார். இதுமுதலே வள்ளலாரின் செயல்களிலும் சிந்தனைகளிலும் புரட்சி வெளிப்படத் தொடங்கியது.

கடவுள் ஒன்றே, அது அருட்பெருஞ்சோதி என்றும் அதனை ஒளி உருவில் ஒவ்வொருவரும் தமது அன்பின் மேலீட்டால் புருவமத்தியிலும், உள்ளத்திலும் காணமுடியும் என்றும் கூறினார். இந்த உண்மையான எளிய வழிபாடே ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கு உகந்தது என்றும் கூறினார்

இந்த ஆன்மநேயத்துக்குத் தடையாக இருப்பவைகள் சாதி, மதம், சமயம், குலம், கோத்திரம் எனவும், அவற்றை அறவே விட்டொழிக்க வேண்டும் எனவும், சாதி, மதங்களைப் பொய் என்றும் மதத்தை பேய் என்றும் வருணம், ஆச்சாரம் போன்றவைகளைப் பிள்ளை விளையாட்டு எனவும், எடுத்துக் கூறினார். உலக மக்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வை விதைக்காத உருவ வழிபாடுகளும் அவைகள் மீது கட்டப்பட்டுள்ள கதைகளும் கட்டுக்கதைகள் என்றும் பிள்ளை விளையாட்டு என்றும் இவர் கண்டித்தார்.

ஒற்றுமை உணர்வுக்கும், உண்மைக்கும் புறம்பான வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்றவைகள் மீது பற்றுக்கொள்வதை மிகவும் கண்டிக்கிறார். இவைகளால் ஒரு பயனும் இல்லை என்றும் இவைகள் பொய் எனவும் புனைந்துரைகள் எனவும் வள்ளலார் மிகவும் துணிந்து கூறுகிறார். கண்மூடித்தனமான மூடநம்பிக்கைகளை,

“கலையுரைத்த கற்பனையே நிலைஎனக் கொண்டாடும்

கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப் போக”

என்று கண்டித்துப் பேசுகிறார் (Saravananandha, 1990).

தெய்வத்தை வழிபடுவதற்கு இடைத்தரகர்கள் யாரும் தேவையில்லை என்கின்ற அரிய சிந்தனையை உலகுக்கு அறிவித்தார். தெய்வத்தை வழிபட அதிகம் செலவழித்துப் பூசனைகள் செய்வது மொட்டையடித்தல், காதுகுத்துதல், காவடி எடுத்தல், தீ மிதித்தல், தேர் இழுத்தல், போன்ற சடங்குகள், சம்பிரதாயங்கள் இறைநெறிக்கு எதிரானது எனவும் அது தேவையில்லை எனவும் துணிந்து சொன்னார்.

செத்தவர்களுக்குச் செய்யும் பித்ரு காரியங்களான கருமாதி, திதி முதலிய சடங்குகளுக்காக வீணாகப் பயனின்றிச் செய்யப்படும் வீண்செலவுகளை அந்த நாளில் இறந்தவர்களை நினைத்து ஏழைகளுக்கும், பசித்தவர்களுக்கும் அன்னதானம் செய்து பயனுள்ள வகையில் செலவுசெய்ய வலியுறுத்தினார்.

ஜீவகாருண்யம் என்று அழைக்கப்படும் அனைத்து உயிர்களிடமும் காட்டும் உயிர்நேயமாகிய அன்பே உண்மையான கடவுளை அடைய சிறந்த வழி என்கிறார். எப்போதும் எல்லா உயிர்களிடத்தும் அன்பையும், கருணையும் பொழிந்து கொண்டு தனிப்பெருங்கருணையராக விளங்குபவரே அருட்பெருஞ்சோதி இறைவராவார் என்றார். இந்தச் சிந்தனையானது நாத்திகரும் ஏற்கத்தக்க உயர்ந்த கொள்கையாகும். உண்மையை ஆராய்ந்து அறிதல்இ பிறர்க்கு உதவி செய்தல் இந்த இரண்டையும் இரண்டு கண்களாக வைத்துக் கடவுளைக் காண அறிவுறுத்துகின்றார். ஓர் இறைக்கொள்கையினை வலியுறுத்தி அந்த இறைமையையும் உள்ளொளியாகக் காணச் சொன்னார்.

1865 ஆம் ஆண்டில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் கண்ட வள்ளலார், பிறர்க்கு உதவும் பண்பையும், பிறர்க்கு பசியாற்றும் கடவுள் தொண்டைச் செய்வதற்கும் சமதர்ம சமுதாயம் காணபதற்கும் 1867 இல் வடலூரில் சத்திய தருமச்சாலையைத் துவங்கினார். ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முக்கிய குறிக்கோளாகப் பசித்தவருக்கு அவர்கள் எந்த மதம், எந்த சாதி, எந்த குலம், கோத்திரம், எந்த தேசம், எந்த மொழி பேசுபவர்கள் என்று விசாரியாமல் யாவருக்கும் சமமாகச் சமபந்தி போஜனம் போடச் சொன்னதோடு அதை நடைமுறைப்படுத்தியவரும் வள்ளலார் ஆவார்

ஒளிவழிபாட்டை யாவரும் சகோதரத்துவத்துடன், ஒருமைப்பாட்டு உணர்வுடன் மேற்கொள்ள வடலூரில் 80 காணி நிலத்தில் பல்லாயிரக்கணக்கானோர் சென்று நின்று வழிபடும் வகையில் ஒரு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை என்னும் ஒரு சபையினைக் கட்டி அதில் அருட்பெருஞ்சோதியினை ஏற்றி வைத்தவர். அதன் மூலம் அன்பையும், அறிவையும் மக்கள் சிந்தனைகளில் ஏற்றிவைக்கத் துடித்தவர்.

காமம், வெறி, கோபம், மோகம், மதம், மாற்சரியம், கொலை முதலான எழுவகை கூடாப் பண்புகளான, மன மாசுகளை ஒவ்வொன்றாக அகற்றினால் உள்ளத்தில் அருட்பெருஞ்சோதி அனுபவத்தில் புலப்படும் என்கிறார். அதையே புறத்தில் ஏழுதிரைகளாகக் காட்டி அவற்றை ஒவ்வொன்றாக நீக்கி இறுதியில் அருட்பெருஞ்சோதிக் கடவுளைச் சபையில் காட்டினார். இந்த

ஏழுதிரைகளை நீக்கி ஜோதி காட்டும் ஜோதி தரிசனத்துக்கு இன்னும் ஆன்மீகரீதியாக நிறைய விளக்கங்கள் கூறப்படுகின்றன. தன்னுடைய மார்க்கத்துக்கென்று ஒரு கொடியினையும், மந்திரத்தையும் தந்தவர் அவர்.

இறைவன் மீது காட்டும் பக்தி என்பது உயிர்க்குலத்திற்கு செய்யும் தொண்டே என்று ஆன்மீகத்தின் பாதையில் மடைமாற்றம் செய்தவர் வள்ளலார். பக்தி இருந்தால் மட்டும் போதாது. சமுதாய இருள் நீக்க வேண்டும். அறியாமை இருட்டு அகல வேண்டும் என உணர்ந்து சமுதாயத்தில் சீர்திருத்தம் காணவிழைந்த முற்போக்கான எண்ணங்கள் கொண்டவர். சீர்திருத்தங்களைப் பேசியவர் செயலில் இறங்கி அருந்தொண்டுகள் பலவற்றைச் சமுதாயத்திற்கும், உயிர்க்குலத்திற்கும் புரிந்த தொண்டுள்ளம் படைத்தவராகவும் விளங்கினார். ஆன்மீகத்தைப் பகுத்தறிவுப் பாதையை நோக்கி திருப்பியவர். அதில் அவர் கூறிய குறிப்பிடத்தக்க மாற்றங்கள்.

1 இறந்தவர்களை எரிக்கக் கூடாது. சமாதி வைத்தல் வேண்டும்

2 எதிலும் பொது நோக்கம் வேண்டும்

3 எந்த உயிரையும் கொல்லக்கூடாது

4 எல்லா உயிர்களும் நமக்கு உறவுகளே. அவற்றைத் துன்புறுத்தக்கூடாது

5 சிறு தெய்வ வழிபாடு கூடாது. அவற்றின் பெயரால் பலி இடுதலும் கூடாது

6 பசித்தவர்களுக்கு சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும்

7 புலால் உணவு உண்ணக்கூடாது

8 கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர்

9 சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கூடாது

10 மத வெறி கூடாது

இதுபோன்ற வள்ளலாரின் முற்போக்குச் சிந்தனைகளைப், பழமைவாதிகளும் வருணாசிரமம் காக்க விழைந்த சில சுயநலக் கும்பலும் இன்றும் வசைபாடித் தூற்றுகின்றனர். அன்புருவான, அறிவுருவமான கடவுள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உள்ளார் என்ற உயர்ந்த சிந்தனையை ஏற்றுக் கொண்டால் இந்தச் சண்டை சச்சரவுகளுக்கு இடமிருக்காது. உயிர்க்குலம் ஒன்று அதற்குக் கடவுளும் ஒன்று என்ற சிந்தனையைப் பரப்பினார்.

“ஒத்தாரும் உயந்தாரும், தாழ்ந்தாரும் எவரும்

ஒருமையுளர் ஆகி உலகியல் நடத்த வேண்டும்”

எனச் சமுதாயம், பொருளாதாரம், கல்வி, போன்றவற்றில் ஒத்த நிலையில், உயர்ந்த நிலையில், மற்றும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் எல்லோரும் ஒற்றுமை உணர்வோடு ஒருவருக்கு ஒருவர் உதவிபுரிந்து வாழவேண்டும். என விரும்பினார் (Vallalar, 1999).

மனிதசக்திக்கு மிஞ்சிய சக்தி உலகினில் எதுவும் இல்லை என்பது பெரியார் கூற்று. அந்த மனிதசக்தியிடம் நல்ல பண்புகள் இருப்பின் அவற்றை கடவுள் பண்புகளாகக் கொண்டால் அந்த பண்புள்ளவரைக் கடவுள் என்று கூறுவதில் தவறில்லை என்பது வள்ளலாரது நிலையாகும். மனிதகுலத்துக்கும் உயிர்குலத்துக்கும் செய்யும் தொண்டின் மூலம் கடவுளை அடையச் சொன்னவர் வள்ளலார்.

கடவுளின் பெயரால் யாகம், பூஜை, திருவிழாக்கள், சடங்குகள் நடத்தி பணவிரயம் செய்கின்ற அறிவுக்குப் பொருந்தாதவற்றையும் பாலின்றித் தவிக்கும் ஏழைக் குழந்தைகளையும் கண்டு மனம் பொறுக்காத பெரியார், 'கடவுளை மற, மனிதனை நினை' என்றார். வள்ளலாரோ 'சமுதாயத் தொண்டை

நினை, உயிர்க்குல தொண்டை நினை' அதுவே கடவுளின் நிலையை அடைய வழி என்றார். இருவரது கொள்கைகளுக்கும் மிகப்பெரிய வேறுபாடு இல்லை.

வள்ளலார் தன்னுடைய மார்க்கம் அறிவியலை அடிப்படையாகக் கொண்ட மார்க்கம் என்று அடிக்கடி வலியுறுத்தினார் என்று அவருடைய முதன்மை மாணாக்கர் தொழுவூர் வேலாயுத முதலியார் பிரம்ம ஞானசபைக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளார். மேலும் 'நான் உண்மை சொல்லவந்தவன் அன்றி பொய் சொல்ல வந்தவன் அல்ல' என்று பல இடங்களில் அருட்பாவில் பாடுகிறார் வள்ளலார்.

## சமரச சன்மார்க்கம்

“மேவுக என்றுரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான்

வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக் கொண்டிடுவேன்

மனங்கோணேன் மானமெலாம் போனவழி விடுத்தேன்

பொய்தான் ஓர் சிறிதெனினும் புகலேன்சத்தியமே

புகலுகின்றேன் நீவிர் எல்லாம் புனிதமுறும் பொருட்டே”

என்று பாடுகிறார் (Vallalar, 1999).

சுத்த சன்மார்க்கச் சீர்திருத்தச் சிந்தனைகளை வழங்கிய காரணத்தால் வள்ளலார் தூற்றப்பட்டதை எண்ணி வருந்தியவராய் மனமெல்லாம் போன வழி விடுத்தேன், என்னை வைதாலும் பரவாயில்லை ஆனாலும் கொஞ்சம் கூட பொய்சொல்லவில்லை உண்மையை மட்டும் சொல்கிறேன் என்றார். ஏன் எதற்காக என்று கேட்டால் உலக மக்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் ஏற்றத்தாழ்வு இன்றி அனைவரும் புனிதமுறும் பொருட்டு என்று சாத்வீக நெறியில் சொன்னார்.

திராவிட சமுதாயத்தை உலகத்தில் உள்ள சமுதாயத்தினரைப்போல் மானமும், பகுத்தறிவும் உள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்பதே என் விருப்பம். இந்த பணியைச் செய்ய எனக்குத் தகுதி இருக்கின்றதோ இல்லையோ அதனைச் செய்ய எவரும் முன்வராத காரணத்தினால் தான் நான் அந்தப் பணியை என்மீது போட்டுக் கொண்டு அதே வேலையாய் இருப்பவன் என்கிறார் தந்தை பெரியார்.

இருவரின் சிந்தனையும் சற்றேறக்குறைய ஒன்று தான். இருவர் நோக்கமும் ஒன்று தான். இவ்வுலகில் மனிதனுக்கு மனிதன் வேறுபாடு இன்றி அனைவரும் மானத்தோடும் தூய சிந்தனையோடும் வாழவேண்டும் என்பதே அந்த நோக்கம். மதத்தின் பெயரால் கடவுளின் பெயரால் மனித சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு கூடாது என்பதே இருவரின் தீர்க்கமான முடிவு. இதற்காக இருவருமே சமுதாயத்தில் போரடி இருக்கின்றார்கள்.

ஆண், பெண், சமத்துவத்துக்காக 19ம் நூற்றாண்டிலேயே குரல் கொடுத்த முதல் ஆன்மீகவாதி வள்ளலார் ஆவார்.

“பெண்ணினுள் ஆணும் ஆணினுள், பெண்ணும்

அண்ணுற வகுத்த அருட்பெருஞ்சோதி“

என்று ஆண், பெண் சமத்துவத்திற்காகப் பாடுகிறார் (Vallalar, 1999). மேலும் பெண்களுக்கும் பாரபட்சமின்றி கல்வி, அறிவு முதலியவற்றை வழங்குவது அவசியம் என்றார் வள்ளலார். பெண்கள் தங்கள் கணவர்மார் இறந்தால் தாலியை அகற்ற வேண்டாம் என்ற சீர்திருத்தக் கருத்தை முன்மொழிந்தவர் வள்ளலார். தாலியே தேவையில்லை என்றார் தந்தை பெரியார். வள்ளலாருடன் இருந்தவர்கள் கூட இவரது முற்போக்கு எண்ணங்களை ஏற்காதவர்களாய் அவரைவிட்டுப் பிரிந்து சென்றதாக வரலாறு கூறுகிறது.

வள்ளலார் தன்னுடைய சமரச வேதப் பாடசாலையில் சாதி லேறுபாடின்றி அனைவருக்கும் ஒன்றாக வேதக் கல்வியறிவைப் புகட்ட முயன்றார். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்னும் மும்மொழிகளையும் போதிக்க விழைந்தவர், அவரவர் குடும்ப சூழ்நிலைக்கேற்றவாறு கல்வி கற்கும் காலத்தில் பொருளுதவியும் செய்ய முற்பட்டவர்.

## முடிவுரை

எளிமை, அடக்கம், பணிவு கொண்டு, ஆணவம் நீக்கி அன்பைத் தேக்கி நடமாடிய சிந்தனையாளரும் சீர்திருத்தவாதியுமான வள்ளலார், அறியாமை இருளில் சிக்கித்தவித்த சமுதாயத்தை அறிவுச்சுடர் ஏந்தி நன்னெறிப்பாதை காட்டியதோடு சைவ சமயத்தின் பாதையை மாற்றியமைத்துப் புதுப்பாதையை ஏற்படுத்தித் தந்தவர் திருவருட்பிரகாச வள்ளலார் எனில் அது மிகையாகாது.

## References

Vallalar, (1999) Thiruarutpa Aaram Thirumurai, Arulperunjothi Agavalpa, Kadaloor, India.

Saravananandha, (1990) Thiruvarutpa, Ramalingar Panimandram, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License